C.P.No.5/2019
Date.19.09.2019
Witness: MW 1 Thiru.K.Premkumar

சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியிடம் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -

இந்த வழக்கு விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். 1ம் எதிர்மனுதாரருக்கும் 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையில் ஏற்பட்ட குத்தகை ஒப்பந்தம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 01.11.2009 தேதியில் இருந்து 1ம் எதிர்மனுதாரர் எஸ்டேடின் தொழிலாளர்கள், பணியாளர்கள் சம்பந்தமான சம்பளம் மற்றும் இதர பிரச்சனைகளை 2ம் எதிர்மனுதாரர்தான் நேரடியாக கவணிக்க வேண்டும் என்றால் சரிதான். 01.11.2009 தேதிக்கு பிறகு 1ம் எதிர்மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரர் எஸ்டேட்டில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் இடையில் முதலாளி - தொழிலாளி என்ற உறவு முறை இல்லை என்று பிரமாண வாக்குமூலத்தில் நான் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். 01.11.2009 தேதி முதல் வேலை நீக்க தேதிவரை மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரிடம் வேலை செய்து அவரிடம் சம்பளம் பெற்றுவந்தார் என்றால் ஆமாம். 1ம் எதிர்மனுதாரருக்கும் , மனுதாரருக்கும் இடையில் முதலாளி - தொழிலாளி என்ற உறவு முறை இல்லாத சூழ்நிலையில் எப்படி மனுதாரரின் வேலை நீக்க உத்தரவில் 1ம் எதிர்மனுதாரர் கையொப்பம் செய்தார் என்றால் அப்போது 2ம் எதிர்மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் Authorization கொடுக்காததால் 1ம் எதிர்மனுதாரர் கையொப்பம் போடவேண்டியிருந்தது. அப்படியென்றால் அரசாங்க நிலுவைகள் போன்ற நடவடிக்கைகளுக்கு 1ம் எதிர்மனுதாரர்தான் பொறுப்பு என்று எடுத்துக்கொள்ளலாமா என்றால் அப்படியில்லை. மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர்தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்று எந்த அடிப்படையில் கூறுகிறேன் என்றால் 30.10.2009 குத்தகை ஒப்பந்தம் சரத்து 16 அடிப்படையில் கூறுகிறேன். சரத்து 16 ல் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, ஆனால் குத்தகை ஒப்பந்தம் 30.10.2009 தேதியில்

அமலுக்கு வருகிறது. சரத்து 16 ல் குத்தகை ஒப்பந்த தேதிக்கு முன்பு ஏற்பட்ட நடவடிக்கைகளா அல்லது அந்த தேதிக்கு பின்னர் ஏற்பட்ட நடவடிக்கைகளா என்று குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். 1.11.2009 தேதிக்கு பிறகு தொழிலாளிகள் மீதான நடவடிக்கைகளை 2 ம் எதிர்மனுதாரர் நேரடியாக எடுக்க முடியும் என்றால் ஆமாம். ஆனால் மனுதாரர்மீது 2 ம் எதிர்மனுதாரர் நேரடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் 2 ம் எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டதால் 1 ம் எதிர்மனுதாரர் நடவடிக்கை எடுத்தார். 2 ம் எதிர்மனுதாரர் எழுத்துமூலமாக 1 ம் எதிர்மனுதாரரிடம் கேட்டுக்கொண்டாரா என்றால் இல்லை, வாய்மொழியாகத்தான் கேட்டார். 2 ம் எதிர்மனுதாரர் வாய்மொழியாக கேட்டுக்கொண்டதால் மனுதாரர்மீது 1 ம் எதிர்மனுதாரர் நடவடிக்கை எடுத்து வேலை நீக்கம் செய்ததாக 2 ம் எதிர்மனுதாரருக்கு கடிதம் அனுப்பினோமா என்றால் 2 ம் எதிர்மனுதாரர் மின் அஞ்சல்மூலமாக அனுப்பிய வேலை நீக்க கடிதத்தில் 1 ம் எதிர்மனுதாரர் கையொப்பம் செய்தார். அந்த மின் அஞ்சல் கடிதத்தின் நகலை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அது அலுவலகத்தில் பைலை தேடிப்பார்த்து எடுக்கவேண்டும். இதுவரை அந்த மின் அஞ்சல் கடிதத்தின் நகலை நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். தற்போது மீண்டும் சாட்சி அந்த கடிதத்தின் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி தனக்கு தெரியாது என்று கூறுகிறார். மின் அஞ்சல் கடிதம் பற்றி எதிர்உரையிலும் , பிரமாண வாக்குமூலத்திலும் தெரிவிக்காமல் தற்போதுதான் முதல்முறையாக தெரிவிக்கிறேன் என்றால் ஆமாம். மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் 2 ம் எதிர்மனுதாரர் நேரடியாக எடுக்க முடியும் என்றும் ஆனால் மனுதாரரின் வேலை நீக்க உத்தரவை 1 ம் எதிர்மனுதாரர் வழங்கியுள்ளதால் 2 ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வேலை வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அதனால் மனுதாரர் கோரியுள்ள தொகையை 1 ம் எதிர்மனுதாரர்தான் வழங்கவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. 2 ம் எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு வேலை

இழப்போ சம்பள பாக்கியோ ஏற்படவில்லை என்றால் அது மனுதாரருக்குத்தான் தெரியும் எனக்கு தெரியாது. மனுதாரர் ஒழுங்கீன நடவடிக்கையில் ஈடுபட்டதாக 2ம் எதிர்மனுதாரருக்கு எந்த புகாரும் வரவில்லை என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் ஒழுங்கு நடவடிக்கை குறித்து விபரங்களை 1ம் எதிர்மனுதாரருடன் பரிமாறிக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும் சொன்னால் என்ன ஒழுங்கு நடவடிக்கை என்று நாங்கள் கேட்கமாட்டோம், 2ம் எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் போட்டோம். வேலை நீக்க தேதியில் மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையில் தொழிலாளி-முதலாளி என்ற உறவு முறை இல்லை என்று கூறும் பட்சத்தில் வேலை நீக்க உத்தரவில் 1ம் எதிர்மனுதாரர் கையெழுத்துபோடுவதற்கு ஏன் மறுப்பு தெரிவிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் எழுத்துமூலமாக சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வேலை வழங்க தயாராக இருந்தார் என்றும் ஆனால் 1ம் எதிர்மனுதாரர் அவ்வாறு எழுத்துமூலமான சம்மத கடிதம் கொடுக்க தயாராக இல்லை என்றும் அதனால் மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்களை 1ம் எதிர்மனுதாரர்தான் அவருக்கு வழங்கவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.